I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
OS.NO.24/2021

**Name** : Velu
**Father/Husband Name** : Maarimuthu
**Age** : 40

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 12.05 p.m

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விலாசம் தான் ஆதார் கார்டில் உள்ளது. சாட்சி காண்பித்தார். சம்பவ இடத்தில் நான் இருந்தேன் என்பதற்கு நான் எதாவது ஆவணம் வைத்துள்ளேனா என்றால் எதுவும் இல்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. மங்கலட்சுமி தான் என்னை அழைத்து வந்தார். மங்கலட்சுமி என் சொந்தக்காரர். மனுதாரர் என்னுடைய உறவினர் எனவே அவர்களுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். காவல் துறை தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு என் பெயர் முதல் தகவல் அறிக்கையில் இருக்கிறதா இல்லையா என்று தெரியாது.

என்னை காவல் துறையினர் சார்பாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல சம்பவம் நடந்தது தெரியும். ஆவண பூர்வமாக எதுவும் தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் அவர் மீது ஒயர் விழந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் ஒயர் விழுந்ததை

நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் ஒயர் விழந்ததை பார்த்தாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் முதல் தகவல் அறிக்கையிலும் அவ்வாறு இல்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே போக வில்லை என்றாலும் எனக்கும் அதுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் 5 மீட்டர் தொலைவில் இருந்தேன். நானும் என் சித்தப்பாவும் ஆட்டோவில் எடுத்து போட்டோம்.

அங்கு எந்த லைன் ஒயரும் அறுந்து அவர் மீது விழவில்லை என்றாலும் ஒயர் எதுவும் தொங்கி கொண்டிருக்க வில்லை என்றாலும் சரியல்ல.( சாட்சி சொல்கிறார்– படபடவென்று மேலே வெடித்தது. மேலே பவர் வெடிக்க ஆரம்பித்தது. அவர் தொலைவாக வந்து நின்று கொண்டார். அருகில் இருந்த பசங்க எல்லாம் வந்துவிட்டோம். மாட்டு வண்டியில் துணி கட்டி இழுத்துவிட்டு விட்டேன்.)

நான் பார்த்த சம்பவம் அவர் படபடவென்று விழுந்தார் என்றாலும் அதைத்தான் பார்த்தேன் என்றாலும் சரிதான். அவர் மீது ஒயர் விழவில்லை அந்த ஒயர் மாட்டு வண்டி மீது விழுந்ததா அல்லது அவர் மீது விழுந்ததா என்று தெரியவில்லை. அவர் மாட்டு வண்டி பிடித்து கொண்டிருந்தார். இந்த ஒயர் விழுந்து அவர் இறக்கவில்லை என்றாலும் அந்த அதிர்ச்சியில் மாரடைப்பு(cardiac arrest) ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றாலும் சரியல்ல, மாட்டு வண்டி மீது சாக் அடித்தது. அவர் ஷாக் அடித்து தான் விழுந்தார். அவரை நான் தூக்கும் போது எனக்கு ஷாக் அடித்ததா என்றால் இல்லை.

ஒயர் விழுந்திருந்தால் கூட உடனடியாக சப்ளை கட்டாகி இருக்கும் என்றாலும் அவ்வாறான அவருக்கு ஷாக் அடித்ததாகவோ ஒயர் விழுந்ததாகவோ மின்சார துறைக்கு புகார் எதுவும் வரவில்லை என்றாலும் தெரியாது. நான் TNEB க்கு எதுவும் புகார் அனுப்பவில்லை.

நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதிக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 12.25 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.